இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

கலைஞர் 100 1924 - 2024

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 81 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 13 – புதன்கிழமை 30 அக்டோபர் 2024 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 81 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 13 - Wednesday 30 October 2024 - Madurai 16 Pages ₹ 5.00

## பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று மலரஞ்சலி செலுத்துகிறார்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.10.2024) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 426 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3268 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் பெருமக்கள் பங்கேற்பு!



**சென்னை, அக். 30- பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 117வது பிறந்த நாள் மற்றும் அன்னாரது 62வது குரு பூஜையை முன்னிட்டு, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் இன்று (30.10.2024) காலை தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளார்கள்.**

**அதேநாளில், முதலமைச்சர் அவர்கள், மதுரை, கோரிப்பாளையத்தில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கும், மதுரை, தெப்பக் குளத்தில் உள்ள மாமன்னர் மருது சகோதரர்கள் திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்து கிறார்.**

தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள் என்று வீர முழக்கம் இட்ட சுதந்திரப் போராட்ட வீரர் பசும்பொன் தேவர் திருமகனார் அவர்கள். இளம் வயதிலேயே பெற்ற தாயை இழந்து, பின் இசுலாமியத் தாய் ஆயிஷாபீவி அவர்களால் வளர்க்கப் பட்டதன் காரணமாக, இசுலாமிய மக்களின்பால் அளவற்ற அன்பும் பாசமும் கொண்டிருந்தார். அன்னிய நாட்டினால் அடிமைப்பட்டிருந்த அடித்தள மக்களின் அன்றாட வாழ்க்கையே போராட்டமாக இருந்ததைக் கண்ணுற்ற தேவர் பெருமகனார், அம்மக்களின் வாழ்வு மேம்பட தன்னையே அர்ப்பணித்தார்.

ஆங்கிலேய அரசை எதிர்த்துப் போராட, சுதந்திரப் போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் தலைமையில் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய ராணுவத்திற்கு தமிழகத்தில் இருந்து பெரும் படையினைத் திரட்டி அனுப்பிய பெருமை தேவர் பெருமகனார் அவர்களையேச் சாரும்.

1939ஆம்ஆண்டு ஜூன் 22, அகில இந்திய பார்வர்டு கட்சியை நிறுவி நேதாஜி சுபாஷ் சந்திரபோஸுடன் இணைந்து செயல்பட்டார். 1952ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் அருப்புக் கோட்டை பாராளுமன்ற தொகுதியிலும், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியிலும் போட்டியிட்டு, இரண்டிலும் வெற்றி என பல்வேறு உச்சங்களைத் தொட்டவர் தேவர் பெருமகனார்.

பசும்பொன் தேவர் திருமகனார் ஆன்மீகம், தேசியம், பொதுவுடைமை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு ஆகிய முக்கியக் கொள்கைகளைத் தன் வாழ்நாளில் இறுதிவரை உறுதியாகப் பின்பற்றியவர்.

இத்தகைய சிறப்புகளை கொண்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்தநாள் தேவர் ஜெயந்தி விழாவாக தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் அக்டோபர் 30ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து திரளான பொதுமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அன்னாரது நினைவிடத்தில் மரியாதை செலுத்தி வருகின்றனர்.

தேவர் ஜெயந்தி விழாவின்போது, கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டும், வெயில் மற்றும் மழையிலிருந்து பாதுகாத்திட, ஒரு நிரந்தர மண்டபம் அமைத்து தர வலியுறுத்தி பொதுமக்கள் நீண்ட நாட்களாக அரசுக்கு வைத்த கோரிக்கையினை ஏற்று, பசும்பொன் கிராமத்தில் அமைந்துள்ள முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தின் இரு நுழைவாயில்களிலும் ஆண்டுதோறும் தற்காலிகமாக அமைக்கப்படும் பந்தலுக்கு பதிலாக பொதுமக்கள் நலன் கருதி இரண்டு மண்டபங்கள் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்டு, அவரது நினைவிடத்தில் 1 கோடியே 55 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தெய்வீகத் திருமகனார் உ.முத்துராமலிங்கத் தேவர் அரங்கத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 28.10.2024 அன்று முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, திறந்து வைத்தார்.

### மாநிலத்திலேயே அதிக வாக்காளர்கள் - சோழிங்கநல்லூர் தொகுதி! குறைந்த வாக்காளர்கள் - கீழ்வேளூர் தொகுதி!

# தமிழ்நாட்டில் 6.27 கோடியை தாண்டிய வாக்காளர்கள்!

### இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலை வெளியிட்டது!

சென்னை, அக். 30 - 01.01.2025ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்தினை இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

29.10.2024 அன்று அனைத்து மாவட்டங்களிலும் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் (பெரும்பாலும் பள்ளிக் கட்டடங்களில் அமைந்துள்ள வாக்குச் சாவடிகள்) ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன. வரைவு வாக்காளர் பட்டியல்கள் https://www.elections.tn.gov.in என்ற வலைதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. மாவட்ட தேர்தல் அதிகாரிகளால், வாக்காளர் பட்டியலின் இரண்டு நகல்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருக்கு வழங்கப்படும்.

புகைப்படத்துடன் கூடிய ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம், 2025ன் வரைவு வாக்காளர் பட்டியலின் படி தமிழ்நாட்டில் தற்போது 6,27,30,588 வாக்காளர்கள் உள்ளனர். (ஆண்கள்: 3,07,90,791, பெண்கள்: 3,19,30,833, மூன்றாம் பாலினத்தவர்: 8,964)

மாநிலத்திலேயே உயரளவு வாக்காளர்களைக் கொண்ட சட்டமன்றத் தொகுதியாக 6,76,133 வாக்காளர்களுடன், செங்கல்பட்டு மாவட்டத்தின் 27.சோழிங்கநல்லூர் தொகுதி உள்ளது (ஆண்கள்: 3,38,183, பெண்கள்: 3,37,825, மூன்றாம் பாலினத்தவர்: 125)

மாநிலத்திலேயே குறைந்த அளவு வாக்காளர்களைக் கொண்ட சட்டமன்றத் தொகுதியாக 1,73,230 வாக்காளர்களுடன் நாகப்பட்டினம் மாவட்டத்தின் 164.கீழ்வேளூர் தொகுதி உள்ளது. (ஆண்கள்: 85,065, பெண்கள்: 88,162, மூன்றாம் பாலினத்தவர்: 3)

16.11.2024, 17.11.2024, 23.11.2024 மற்றும் 24.11.2024 ஆகிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் (பொதுவாக, வாக்குச் சாவடிகள்) சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல்/ நீக்கல்/ திருத்தல்/ இடமாற்றம்/ ஆதார் எண்ணை இணைத்தல் ஆகியவற்றுக்கான படிவங்கள் அந்தந்த நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் கிடைக்கும். பூர்த்தி செய்த படிவங்களை அங்கேயே சமர்ப்பிக்கலாம்.

01.01.2025, 01.04.2025, 01.07.2025 மற்றும் 01.10.2025 ஆகிய தேதிகளில் 18 வயது பூர்த்தியடைபவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களும், பெயர் சேர்க்க படிவம் 6ல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் படிவத்தில் உள்ள உறுதிமொழியினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். வாக்காளர் பட்டியலில் இடம் பெறும் வாக்காளரின் புகைப்படங்களின் தரத்தை மேம்படுத்தும் விதமாக விண்ணப்பதாரர்கள் 200 dpi resolution கொண்ட புகைப்படங்களை அளிக்க / தரவேற்ற அறிவுறுத்தப்படுகிறார்கள் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

## வீடற்ற ஏழை எளிய மக்களுக்காக

# ரூ.426.32 கோடியில் 3268 குடியிருப்புகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, அக். 30 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.10.2024) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 426 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3268 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டு வசதியினை ஏற்படுத்தி தரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது. நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வீட்டுவசதி வாய்ப்புகள் மட்டுமே போதுமானதாக இருக்காது, அவர்களுக்கு குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற போதுமான நகர்ப்புற வசதிகளுடன் வீட்டுவசதி ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 1.9.2021 அன்று தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார். குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகளை திறந்து வைத்தல்**

அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் சென்னையில் குப்பைமேடு திட்டப்பகுதியில் தரை மற்றும் ஏழு தளங்களுடன் 85 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் 500 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், சத்தியவாணி முத்து நகர் திட்டப்பகுதியில் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் 73 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் 438 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், டோபிகானா திட்டப்பகுதியில் தூண் மற்றும் நான்கு தளங்களுடன் 31 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் 272 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், சந்திரயோகி சமாதி திட்டப்பகுதியில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் 38 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் 240 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்; இராதாகிருஷ்ணபுரம் திட்டப்பகுதியில் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் 25 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் 168 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

ஈரோடு மாவட்டம், குள்ளங்கரடு திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 37 கோடியே 44 இலட்சம் ரூபாய் செலவில் 416 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் அக்கரைகொடிவேரி திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 21 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் 256 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்;

கன்னியாகுமரி மாவட்டம், குமாரபுரம் திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 30 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் 288 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் ;

கோயம்புத்தூர் மாவட்டம், சி.எம்.சி.காலனி - 2 திட்டப்பகுதியில் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் 25 கோடியே 25 இலட்சம் ரூபாய்

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்